**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமை பிரசங்கம்**
**21 பிப்ரவரி 2020 / 27 ஜமாதியுல் ஆகிர் ஹிஜிர் 1441**

# தியாகத்தின் உயிரோட்டத்தை அறிதல்: அல்-அர்கம் இப்னு அபீ அல்-அர்கம் (ரலி)

الحَمدُ لِلَّهِ الَّذي رَفَعَ دَرَجَةَ الصَّابِرِينَ عِندَ المُصِيبَةِ، وَجَزَاهُم بِمَا صَبَرُوا فِي الدُّنيَا وَالآخِرَةِ، أَشهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ لَا نَبِيَّ بَعدَهُ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّم عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصحَابِهِ وَمَن وَالَاهُ.

أَمَّا بَعدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ، وَكُونُوا مَعَ الصَّابِرِينَ.

**மரியாதைக்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அருளியுள்ள அனைத்து அருட்கொடைகளுக்காக, அவனுக்கே அனைத்து புகழும் உரித்தாகுக! அல்லாஹ் நம்மீது கொண்டுள்ள அன்பு மற்றும் கிருபையின் காரணமாக அவனுக்கே அனைத்து நன்றிகளைச் செலுத்துகிறோம். நமது உள்ளங்களில் ”தக்வா” எனும் இறைபக்தியின் விதைகளை விதைப்பதற்காக நம்மை அல்லாஹ் தேர்ந்தெடுத்துள்ளான். நமது சிறந்த வணக்க, வழிபாடுகளை அதிகரித்துக் கொள்வதற்காகவும் அல்லாஹ்வின் படைப்புகளுக்கு சேவை செய்வதற்காகவும் பல வழிகளை அல்லாஹ் நமக்குக் காண்பித்துள்ளான். நற்காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்புகளை தொடர்ந்து நமது

வாழ்வில் வழங்கி, அருள் புரியுமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறோம். ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

**சகோதரர்களே!**

இன்று, ஒரு முக்கியமான தனிநபரின் வாழ்க்கை வரலாற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இப்பெரியாரின் பெயர் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே கூறப்பட்டுள்ள போதிலும் அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் மிகச் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இஸ்லாம் மக்காவில் வளர்ந்து வந்த காலங்களில் அவர்கள் ஆற்றிய பங்குகள் நற்காரியங்களைச் செய்யத் தூண்டுபவையாக இருந்தன. அவர்கள் தான், அல்-அர்கம் இப்னு அபீ அல்-அர்கம் (ரலி) ஆவார்.

இறைத்தூதுவத்தின் ஆரம்ப காலத்தில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது மக்களின் எதிர்ப்பை எதிர்கொண்டு வந்த காலத்தில், தனது தோழர்களைச் சந்திப்பதற்கு ஒரு பாதுகாப்பான இடம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்குத் தேவைப்பட்டது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் இத்தேவையை அறிந்ததும் அல்-அர்கம் இப்னு அபீ அல்-அர்கம் (ரலி) அவர்கள் உடனே தனது வீட்டை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் சந்திப்பதற்கு ஆர்வத்துடன் வழங்கினார்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் அர்கம் (ரலி) அவர்களின் இப்பங்களிப்பைப் பற்றி அதிகம் விவாதிக்கப்படுவதை நம்மால் காண முடியவில்லை. எனினும், இப்பங்களிப்பை இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் ”சீறா” எனும் வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்ய மறக்கவில்லை. ஒரு சிறிய நற்காரியம் கூட தொடர்ந்து பயன் தருகின்ற, நல்ல ஆக்கப்பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக அமையும் என்பதற்கு இவர்களின் பங்களிப்பு மிகச் சிறந்த உதாரணமாக உள்ளது.

நான் சற்று முன் தங்களுடன் பகிர்ந்து கொண்ட வரலாறாகிறது, அல்லாஹ்வின் பாதையில் தியாகம் புரிவதன் உண்மையான பொருளை வெளிப்படுத்துவதாகும். இதைத் தான், அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتَّى تُنْفِقُوا مِمَّا تُحِبُّونَ وَمَا تُنْفِقُوا مِنْ شَيْءٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ

பொருள்: நீங்கள் நேசிக்கும் பொருள்களிலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் நன்மையை அடையமாட்டீர்கள். எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான். அத்தியாயம்: (ஆலி இம்ரான், வசனம்: 98)

தியாகம் மற்றும் பங்களிப்பின் வகை மற்றும் தரத்தைப் பற்றித் தான் பெரும்பாலும் இஸ்லாத்தின் போதனை உள்ளது. ஒவ்வொருவரும் தனது சொந்தத் தேவையை மற்றவர்களின் மிகப் பெரிய தேவைகளுக்காகவும் அதிக அளவிலான பலன்களுக்காகவும் தியாகம் செய்ய வேண்டும்.

**சகோதரர்களே!**

அல்-அர்கம் இப்னு அபீ அல்-அர்கம் (ரலி) அவர்களின் வரலாற்றில் பல சிறந்த மதிப்பீடுகள் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் நாம் பாடம் பெறுவது அவசியமாகும். அம்மதிப்பீடுகளில் ஒன்று, நாம் ஆற்றும் பங்களிப்பும் தியாகமும் எவ்வாறு தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக உள்ளன என அறிந்து செய்வதாகும் அத்தியாகங்களையும் மதிப்பீடுகளையும் மக்கள் அடைந்து கொள்ளும் போது, அவை அம்மக்களால் மட்டும் அங்கீகரிக்கப்படாமல் அல்லாஹ்வின் பார்வையிலும் அவை மதிப்புமிக்கவையாக இருக்க வேண்டும். உதாரணமாக, பின்வரும் ஹதீதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அந்த

ஹதீதானது, ஒரு மனிதனின் வரலாற்றைக் கூறுகிறது. அந்த மனிதர் எவ்வாறு ஒரு சிறிய நற்காரியத்தைச் செய்து, பலருக்கு இலகுவை ஏற்படுத்தினார்; பலரது கஷ்டங்களைப் போக்கினார்; அதன் காரணமாக, அவருக்கு எவ்வாறு இறைவனின் மன்னிப்பும், சொர்க்கத்தில் நுழைவதற்கான வாய்ப்பும் கிடைத்தது என்பதை அந்த ஹதீது விளக்குகிறது. நடைபாதையில் கிடந்த ஒரு முள் கிளையை அவர் அகற்றினார்; அவரது இந்த சிறிய, சாதாரணமான நற்காரியத்தின் காரணமாக, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அவருக்காக பின்வருமாறு இறைவனிடம் வேண்டிக் கொண்டார்கள்:

"அல்லாஹ் இவருக்கு நற்கூலியை வழங்குவானாக! மேலும் சொர்க்கம் செல்லும் வாய்ப்பையும் வழங்குவானாக!" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

**இரண்டாவதாக**, சகோதரர்களே! மற்றவர்கள் செய்யும் தியாகங்களையும் பங்களிப்புகளையும் குறைத்து மதிப்பிட வேண்டாம். சில விஷயங்களை நாம் சிறியதாகவும் முக்கியமற்றவையாகவும் கருதலாம். ஆனால், அல்லாஹ்வின் பார்வையில் அவை மிகச் சிறந்தவையாகத் தென்படும். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நமக்கு பின்வருமாறு நினைவூட்டியுள்ளார்கள்:

فَاتَّقُوا النَّار ولو بِشِقِّ تَمْرَةٍ

பொருள்: "பேரீத்தம் பழத்தின் பாதி பகுதியை தர்மம் செய்தாவது நரக நெருப்பிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

எனது சகோதரர்களே! மேற்கண்ட ஹதீதில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஒப்பிட்டுக் கூறியுள்ள விஷயத்தில் நாம் ஆழமாக சிந்திப்பது அவசியமாகும். ஒரு பேரீத்தம் பழத்தின் மதிப்பு எவ்வளவு சிறியது? நமது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மேற்கண்ட ஹதீதில் கூறியுள்ளதன் பிரகாரம்

அதனை இரண்டு துண்டுகளாக பிரித்தால் இன்னும் சிறியதாக அது ஆகிவிடுமல்லவா? ஒருவர், ஒரு பேரீத்தம் பழத்தின் பாதி பகுதியை தர்மம் செய்தால் அது பெரிய விஷயமாகக் கருதப்படுமா? அவ்வாறிருந்தும் இதற்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஏன் முக்கியத்துவமளித்து கூறியுள்ளார்கள் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட ஹதீதில் காணப்படும் நபி(ஸல்) அவர்களின் ஒப்பிடுதல் நமக்குத் தெரிவிக்கும் கருத்து யாதெனில், ஒரு சிறிய நற்காரியம் உளத்தூய்மையுடன் புரியப்படுமானால் அதனைச் செய்தவருக்கு நிச்சயம் மிகப் பெரிய நன்மையை அது தேடித் தரும் என்பதாகும். அதுமட்டுமல்ல, அல்லாஹ்வின் பார்வையில் அவரது அந்தஸ்தையும் உயர்த்தி விடும்.

ஒருவர், எவ்வளவு பங்களிப்புகளைச் செய்துள்ளார் என இறைவன் பார்ப்பதில்லை. மாறாக, நாம் மதிக்கும் ஒரு பொருளை (அது நமது செல்வமாகவோ, நேரமாகவோ அல்லது சக்தியாகவோ எவ்வாறிருந்தாலும்) எவ்வளவு உளப்பூர்வமாக, ஆர்வத்துடன் கொடுக்கின்றோம் என்பதைத் தான் இறைவன் காண்கிறான்.

**சகோதரர்களே!**

அல்-அர்கம் (ரலி) அவர்களின் மேற்கண்ட வரலாறானது, நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காணுமாறும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண பங்களிக்குமாறும், பிரச்சனையை மேற்கொண்டு சிக்கலாக்காமலிருக்குமாறும் நமக்குப் போதிக்கிறது.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மற்றும் மற்ற தோழர்களைப் போன்று அல்-அர்கம் இப்னு அபீ அல்-அர்கம் (ரலி) அவர்களும் பல சவால்களை எதிர்கொண்டார்கள். எனினும், எதையும் செய்யாமலிருப்பதை அவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. விதியைக் குறை கூறிக் கொண்டும் இருக்க வில்லை. அவர்கள் வெறுமனே புகார் செய்து கொண்டிருக்கவில்லை.

சூழ்நிலையின் எதிர்மறையான பகுதியை அவர்கள் பார்த்துக் கொண்டிருக் கவில்லை.

மாறாக, பிரச்சனைக்குத் தீர்வு காண பங்களிப்புச் செய்தார்கள். உதவி செய்தார்கள்; நல்ல மாற்றங்கள் ஏற்படக் காரணமாக அமைந்தார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்களின் சுமையைக் குறைக்க தன்னால் முடிந்த அளவு சிறப்பாக முயற்சித்தார்கள்.

இந்தப் பாடத்தைத் தான், இந்த வரலாற்றின் மூலம், குறிப்பாக, நாம் எதிர்கொண்டு வரும் இக்கடினமான காலங்களில் பெறுவது அவசியமாகும். இக்காலங்களில் நாம் ஒவ்வொருவருக்கும் உதவி, ஒத்துழைப்புகள் செய்வது அவசியமாகும். இக்கடினமான நாட்களை தீர்மானத்துடன், உறுதியாக எதிர்கொள்வதற்கு நமது உள்ளங்களை ஒன்றிணைக்க வேண்டும்.

கடந்த சில வாரங்களில், அனைத்து வகையான பங்களிப்புகளைச் செய்கின்ற தனிநபர்களை நாம் காண முடிந்தது. சிலர், முகமூடிகளையும் சிலர், சுகாதாரப் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு உணவுகளையும் சிலர், பொதுப் பயன்பட்டுக்காக கைகளைச் சுத்தம் செய்யும் பொருட்களையும் இலவசமாக வழங்கினார்கள். இது போன்ற உதாரணங்கள் பல உள்ளன. இவையெல்லாம் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய சிறந்த முயற்சிகளாகும். இவற்றை இன்னும் அதிகமாகச் செய்வதும், இந்நற்காரியங்களை மேற்கொண்டு பன்மடங்காக ஆக்குவதும் அவசியம் என நான் உறுதியாக நம்புகிறேன்.

பங்களிப்புகளைச் செய்வதற்கான வாய்ப்புகளைத் தேடிக் கொள்ளுங்கள். இக்கஷ்டமான காலங்களில் நற்காரியங்களைச் செய்ய முற்படுங்கள். இக்காலங்களில் நாம் ஒன்றுபட்டு உளப்பூர்வமாகச் செய்யும் செயல்களின் காரணமாக, அனைத்துவிதமான தீங்குகளை விட்டும் அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை பலப்படுத்துவதற்கான ஆர்வத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! அல்லாஹ்வை நாம் சந்திக்கும் போது, நம்மையும் நமது குடும்பத்தார்களையும் ”தக்வா” உடைய மக்களுடன் அல்லாஹ் சேர்த்துவைப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.